# நவம்பர் – 15 – வியாழன்
### புனித பெரிய அல்பேட்
### ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்: திபா. 146:7

## முதல் வாசகம் : பிலமோன் 1 :7 – 20

அன்பிற்குரியவரே! உம் அன்பைக் குறித்து நான் பெரு மகிழ்வும் ஆறுதலும் கொள்கிறேன். ஆம், சகோதரரே, உம்மால் இறைமக்களின் உள்ளம் புத்துயிர் பெற்றுள்ளது.எனவே, நீர் செய்ய வேண்டியதை உமக்குக் கட்டளையிட, கிறிஸ்தவ உறவில், எனக்கு முழு உரிமை உண்டு. என்றாலும்,அன்பின் பெயரால் வேண்டுகோள் விடுவிக்கவே விரும்புகிறேன். கிறிஸ்து இயேசுவின் தூதுவனாக அவர் பொருட்டுக் கைதியாக இருக்கும்பவுலாகிய எனக்குச் சிறையிலிருந்தபோது பிள்ளையான ஒனேசிமுக்காக உம்மிடம் வேண்டுகிறேன்.முன்பு உமக்குப் பயனற்றவனாக இருந்த அவன், இப்பொழுது எனக்கும்இ உமக்கும் பயனுள்ளவன்.அவனை உம்மிடம் திரும்ப அனுப்புகிறேன். அவனை அனுப்புவது என் இதயத்தையே அனுப்புவது போலாகும்.நற்செய்தியின் பொருட்டுச் சிறையுற்றிருக்கும் எனக்கு, உமது பெயரால் பணியாற்ற, அவனை என்னிடமே நிறுத்திக்கொள்ள விரும்பினேன்.ஆனால் நீர் செய்யும் நன்மையைக் கட்டாயத்தினால் செய்யாமல், மனமாரச் செய்யவேண்டுமென்று நினைத்தே, உம்முடைய உடன்பாடின்றி எதையும் செய்ய நான் விரும்பவில்லை.அவன் என்றும் உம்மோடு இருக்க உம்மை விட்டுச் சிறிது காலம் பிரிந்திருந்தான் போலும்!இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையைவிட மேலானவனாக, அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும். அவன் என் தனிப்பட்ட அன்புக்குரியவன். அப்படியானால் மனிதன் என்னும் முறையிலும் ஆண்டவரைச் சார்ந்தவன் என்னும் முறையிலும் அவன் எத்துணை மேலாக உம் அன்புக்குரியவனாகிறான்!எனவே, நமக்குள்ள நட்புறவைக் கருதி, என்னை ஏற்றுக்கொள்வது போல் அவனையும் ஏற்றுக்கொள்ளும்.அவன் உமக்கு ஏதாவது தீங்கு இழைத்திருந்தால் அல்லது கடன்பட்டிருந்தால் அது என் கணக்கில் இருக்கட்டும்.நானே அதற்கு ஈடுசெய்வேன், எனப் பவுலாகிய நான் என் கைப்பட எழுதுகிறேன். நீர் உம்மையே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லை.ஆம் சகோதரரே, ஆண்டவர் பொருட்டு எனக்கு இந்த உதவியைச் செய்யும். கிறிஸ்துவின் பெயரால் என் உள்ளம் புத்துயிர் பெறச்செய்யும்.

**பதில்பாடல் :** யாக்கோபின் இறைவனைத் தம் துணையாகக் கொண்டோர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி : லூக்கா17 : 20 – 25

அக்காலத்தில் இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர். அவர் மறுமொழியாக, ”இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது.இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே! எனச் சொல்லமுடியாது. ஏனெனில், இறையாட்சி உங்கள் நடுவேயே செயல்படுகிறது” என்றார்.பின்பு அவர் சீடர்களை நோக்கிக் கூறியது ”ஒரு காலம் வரும் அப்போது மானிட மகனுடைய நாள்களில் ஒன்றையாவதுகாண நீங்கள் ஆவலாய் இருப்பீர்கள். ஆனால் நீங்கள் காணமாட்டீர்கள்.அவர்கள் உங்களிடம், ”இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே!” என்பார்கள். ஆனால் நீங்கள் போகவேண்டாம் அவர்களைப் பின் தொடரவும் வேண்டாம்.வானத்தில் மின்னல் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரைக்கும் பளீரென மின்னி ஒளிர்வது போல மானிடமகனும் தாம் வரும் நாளில் தோன்றுவார்.ஆனால் முதலில் அவர் பல துன்பங்கள் பட்டு இந்தத் தலைமுறையினரால் உதறித் தள்ளப்பட வேண்டும்“ என்றார்.

**தியானம்:** இறைவனுடைய தீர்ப்பு நாள் எதிர்பாராத நேரத்தில் வரும் இந்நாளின்போது நாங்கள் இறைவனின் அரசுரிமையில் பங்குபெற தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று இன்றைய இறைவார்த்தைகள் எமக்கு அழைப்பு விடுக்கின்றது. நாங்கள் இறைவன் எமக்குக் கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து உண்மை வாழ்வு வாழ்ந்து வந்தோதோமேயானால் இறைவன் அழிவிலிருந்து தப்புவித்து எங்களை தன்னோடே இணைத்துக் கொள்வார். நோவாவின் காலத்தில் இறைவனுக்கெதிராக மக்கள் செயற்பட்டு பாவங்கள் புரிந்ததன் நிமித்தம் நோவா பேழை சென்றதன் பின் வெள்ளப் பெருக்கை வருவித்து அழித்து விடுகிறார். அதே போன்று லோத்தின் காலத்திலும் மக்கள் இறைவனுக்கெதிராக செயல்பட்டதன் நிமித்தம் லோத் சோதோமை விட்டு போனதன் பின்பு விண்ணிலிருந்து பெய்த கந்தகமும், தீயும் அவர்களை அழித்தன. ஏனெனில் இவர்கள் இருவரும் இறைவனுக்கு ஏற்புடைய வகையில் வாழ்ந்ததினால் காப்பாற்றப்பட்டார்கள். அன்று பத்துக்கன்னியர்கள் கிறிஸ்துவை எதிர் கொள்ள சென்றார்கள் ஆனால் ஐவர் விளக்குகளுடன் எண்ணெயும் மற்றைய ஐவர் விளக்களுடன் மட்டும் சென்றார்கள். ஐந்து கன்னியர்களின் விளக்குகள் அணைந்து போகவே. அவர்கள் எண்ணெய் வாங்க கடைக்குச் சென்ற போது மனுமகன் வந்தார். தயாராக இருந்த ஐவரையும் தன்னோடு அழைத்துச் சென்றார். இன்று நாங்கள் எம் கண் முன்னே பல அழிவுகள், போர் முழக்கங்கள், தப்பான போதனைகள் போதிப்பவர்களும் இவ்வாறாக பெருகியவண்ணம் இருப்பதை பார்க்கின்றோம். எனவேதான் மானிட வருகையின் போது இவ்வாறு நிகழும் என்பதை வெளிப்படுத்துகிறார். (லூக்17:26) எனவே நாங்கள் எங்களையே ஆராய்ந்து பார்த்து எம்மிடம் எவ்வாறானவை தீயவற்றிற்கு இட்டுச் செல்கின்றது என்று கண்டறிந்து எமது மனங்களைத் தூய்மைப்படுத்தி, அழிவுகளிலிருந்து தப்பித்த வாழ்ந்து இறையாட்சிக்கு செல்வதற்கு எங்களை தயார்படுத்துவோம்.